2011 ஆகஸ்ட் 10]

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து, சிவகங்கைக்கு அரசு பேருந்து 80 நடைகளும், தனியார் பேருந்து 11 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு விகிதம் மிகவும் குறைவாகவே உள்ளது. பயணிகளின் அடர்வு விகிதம் அதிகரிக்கும் போது தேவையின் அடிப்படையில் தனியாக மகளிர் பேருந்து காலை மற்றும் மாலையில் இயக்க ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. Zero hour — விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிவகாசி அருகே, காளையார்குறிச்சி பட்டாசு தொழிற்சாலையில் . . . (குறுக்கீடு)*

****திரு. க. பாலகிருஷ்ணன்:** *வினாக்கள்—விடைகள் நேரம் முடிந்த பிறகு, வழக்கமாக* 'zero hour' *என்கிற நிகழ்ச்சி இடம்பெறும். நம்முடைய அவையிலே அது தொடர்ந்து இடம் பெறாமல் இருந்துகொண்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போது, இது* 'zero hour' *தான். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது, மாநில சட்டமன்றப் பேரவைகளிலும் சரி, நாடாளுமன்றத்திலும் சரி, அதிகாரப்பூர்வமாக* 'zero hour' *என்று எதுவுமே கிடையாது. பத்திரிகையாளர்களும், ஊடகங்களும் அதை* 'zero hour' *என்று குறிப்பிடுவார்கள். அவ்வளவுதான். பொதுவாக ஒரு சட்டமன்றம் நடைபெறும்போது,*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஆகஸ்ட் 10

நாடாளுமன்றம் நடைபெறும்போது, கேள்வி நேரம் முடிந்த பிறகு, உறுப்பினர்கள் தாங்கள் விரும்புகின்ற பிரச்சினைகளை எழுப்புவார்கள். அதை நடைமுறையில் 'zero hour' *என்று சொல்கிறோமே தவிர,* 'zero hour' *என்று விதிமுறைகள்படி எதுவும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி).*

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

சிவகாசி வட்டம், காளையார்குறிச்சி பட்டாசு தொழிற்சாலை வெடி விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிவகாசி அருகே, காளையார்குறிச்சி பட்டாசு தொழிற்சாலையில் 5—8—2011 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில் 10 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து, இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. பெ. மகாலிங்கம், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் சட்டப் பேரவை விதி 55—இன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

முற்பகல் 11—10

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில், காளையார்குறிச்சியில் நடந்த பட்டாசுத் தொழிற்சாலை வெடி விபத்து, மிகக் கொடுமையாக இதற்கு முன்பு நடந்த பல விபத்துகளைவிட அதிக உயிரிழப்புகளை உண்டாக்கியிருக்கிறது. தொடர்ந்து அந்தப் பகுதியிலே*